www.newwisdomministries.com

# ஞா ன ஒ லி



# அற்புதமான மர மண்டை

ஞானம் 6 - ஒலி 37 - 24.09.2023



# மனிதன் மண்ணின் மன்னன்





**தலையங்கம்**

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி

இயேசு கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் ஞான ஒலியின் மங்களகரமான நல்வாழ்த்துக்கள்.

போராடும்வரைக்கும்தான் மனிதன். மனித வாழ்வு அற்புதமான கொடை. ஆனால் அதை நிறைவாக வாழ, அதன் முழுப்பலனையும் அடைவது அதைவிட மகிமையானது. வெற்றிகரமாக வாழ்வது என்பது ஓர் இமாலயச் சாதனையாகும். மிக உயர்ந்தவை எதுவும் சுலமாகப் பெற முடியாது. அவற்றைப் பெறுவதற்கு சில உயர்ந்தத் தகுதிகள் வேண்டும்.

சாதாரண ஐந்தறிவு கொண்ட உயிரினங்களைப்போல, உண்பதும், உயர் வாழ்வதும் மனிதருக்கானதல்ல. அவன் அனைத்திற்கும் சிகரமாகப் படைக்கப்பட்டவன். அதனால், அவனுக்குக் கொடுக்கப்பட்ட அனைத்தும் படைப்பின் சிகரத்தில் வைக்கப்படத் தகுதியானவை. ஒப்பற்றவை ஒப்புயர்வற்றவருக்கே என்பதைத்தான் அது எடுத்துக் காட்டுகின்றது.

அத்தகைய மாண்பைப் பெற்ற இந்த மனித வாழ்வின் அருமைப் பெருமைகளை அறிந்து கொள்வதற்காகத்தான் ஞானிகள், சித்தர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் தவமிருந்தார்கள். அதன்மூலம் தாங்கள் பெற்ற மனிதத்தின் இரகசியக் கூறுகளை நமக்குப் படிப்பினைகளாக வழங்கிவிட்டுச் சென்றார்கள்.

சாதாரண மிருகங்கள், மரம், செடி, கொடிகளின் வாழ்வின் முறைகளையும், இரகசியங்களையும் இன்னும் விஞ்ஞானம் அறிந்தபாடில்லை. இந்த இயற்கையிலே கொட்டிக் கிடக்கும் அற்புதங்களும், அதிசயங்களுமே அறிவியலுக்கு எட்டாக் கனியாக இருக்கின்றது.

அப்படியிருக்க, மனிதனுக்கு இறைவன் கொட்டிக் கொடுத்திருக்கின்ற வளங்களையும், வரங்களையும் அளவிட முடியாததாய் இருக்கின்றது.

அரிய விஞ்ஞானியான ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்கூட, தன் மூளையின் சக்தியின் ஒரு சதவீதத்துக்கும் குறைவாகத்தான் பயன்படுத்தினார் என்று சொன்னால் மனிதனுக்குள் ஆற்றல்களை நினைத்தால், மூச்சுத் திணர வைக்கும் பிரமிப்புதான் ஏற்படுகின்றது.

ஒருவன் தனக்கு எப்படிப்பட்ட அறிவும், ஆற்றலும் கொடுக்கப்பட்டு இருக்கின்றது

என்று அறிந்தும் அதைப் பயன்படுத்தத் தெரியவில்லை என்றால், எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகத்தான் அமையும். கவிழ்த்து வைக்கப்பட்ட பாத்திரத்தின் மீது கடல் நீர் முழுவதையும் கொட்டினாலும், அது நிரம்பப் போவதில்லை.

அது நாய் பெற்ற தெங்கம் பழத்தைப் போன்றதுதான்.

ஒருமுறை ஒரு மனிதன், தான் வாழ்வில் தோற்றுவிட்டதாக உணர்ந்து, இனி வாழ்ந்து பயனில்லை என்று தற்கொலை செய்ய போனபோது, கடவுள் அவனுக்குத் தோன்றி, தற்கொலை செய்ய வேண்டாம் என்று அறிவுரை கூறினார்.

அதற்கு அந்த மனிதன், தன்னை பெற்றோர் படிக்க வைக்கவில்லை, சரியான வேலையில்லை, அதனால் திருமணமும் ஆகவில்லை, சமுதாயத்திலும் மரியாதையில்லை, பல வருடங்களாக போராடிப் பார்த்துவிட்டேன் எல்லாமே தோல்வி, தோல்விதான். காசில்லாதவன் வாழ்வதற்கு தகுதியே இல்லை, அதனால்தான் உயிரை மாய்த்துக் கொள்ள விரும்பினேன் என்றான்.

அதற்குக் கடவுள் அவனிடம் ஒரு உண்மையை எடுத்துச் சொன்னார். ஒரு நாள் ஒரு விவசாயி, புல்லையும், மூங்கில் விதையையும் தன் தோட்டத்தில் நட்டு வைத்தார். மூங்கிலும் புல் வகையைச் சேர்ந்ததே. புல் மிகவிரைவில் ஓரிரு நாளிலேயே வேகமாக வளர்ந்து, பசுமையாகக் காட்சி தந்தது. ஆனால், மூங்கில் வளரவே இல்லை. ஒரு நாள் அல்ல, ஒரு மாதமல்ல, ஐந்து வருடங்கள் வரை மூங்கில் வளரவேயில்லை. விவசாயி, மனம் தளராமல், அந்த மூங்கில் விதைகளுக்கு தினமும் நீர் ஊற்றிக் கொண்டே இருந்தார். சிறிதுகூட வளராத, ஐந்து வருடங்கள் மண்ணுக்குள்ளேயே புதைந்திருந்த அந்த மூங்கில் விதைகளுக்கு அவர் மிகவும் பெறுமையாக நீர் ஊற்றி, உரமிட்டு பராமரித்தார். ஆனால், ஐந்து வருடங்களில் அந்த புல் பரந்து விரிந்து தரையில் வளர்ந்திருந்தது.

ஆனால், ஐந்தாவது வருடங்களுக்குப் பிறகு மூங்கில் வளர ஆரம்பித்தது, என்ன ஆச்சரியம் ஒரே நாளில் ஒரு மீட்டர் வரை வளர்ததுவிட்டது. அதே அளவில் தினமும் வேகமாக வளர்ந்து ஒரே மாதத்தில் முப்பது மீட்டருக்கும் மேலாக மிக உயரமாக வளர்ந்ததோடு மட்டுமல்லாமல், அது பல கிளைகளாக பரந்து விரிந்து அடுக்கடுக்காக ஒரு தோப்பாக வளர்ந்தது....

அந்த தொடக்க ஐந்து ஆண்டுகள், மூங்கில் தன் வேர்களை மண்ணுக்கடியில் எங்கெல்லாம் நீர் நிலைகள் இருந்ததோ, அது எத்தனை மைல் தூரத்தில் இருந்தாலும், அத்தனை தூரம்வரை நீண்டு வளரச்செய்தது. தான் விதைக்கப்பட்ட அந்த இடத்திலிருந்து, பல மைல் தூரம் வரை தன் வேர்களை பரந்து வளரச்செய்து தன் தேவைக்கான நீர் ஆதாரங்களைக் கண்டுபிடிக்கும்வரை அது கடுமையாக, பொறுமையாக உழைத்தது. அதன் உழைப்பை யாரும் அறியவில்லை. இருந்தாலும், ஒரு சாதாரண மூங்கில் யாருடைய உதவியையும் தேடாமல், தன்னந்தனியாய், தனக்காகப் பாடுபட்டு தன் வாழ்வை வாழ்கின்றது. சாதாரண ஒரு மூங்கிலுக்கு நான் எவ்வளவு ஞானத்தைத் தந்துள்ளேன் என்றாராம்.

நமது போராட்டம் பெரிதாக இருக்குமென்றால், நாம் பெறப்போகும் வெற்றி இமாலய வெற்றியாக இருக்கும். புல்லைப்போல அற்பத்தன்மான வெற்றிகள், நிரந்தரமானதுமல்ல, பெருமைக்குரியதுமல்ல.

ஓட்டப்பந்தயத்தில் தங்க மெடல் வாங்க வேண்டுமென்றால், பயிற்சி கடுமையாகத் தான் இருந்தாக வேண்டும். போராட்டங்களை ரசித்து ருசித்து கொண்டாடும் மனிதர்களே வான் புகழ் பெற்றிருக்கின்றார்கள்.


இந்தப் பாடத்தைத்தான் இயேசு கல்வாரியில் தன் உயிரைக் கொடுத்து போதித்துள்ளார்.

அதனால்தான் அனைவரும் அவர் முன் மண்டியிட்டு இயேசுவே ஆண்டவர் என்று அறிக்கையிடுகின்றனர்.

கடும் உழைப்புக்கும், போராட்டத்திற்கும் எப்போதும் மதிப்பும், வெற்றியும் உண்டு. மனிதப் படைப்பு வெற்றிபெறவே.

# விவிலியம் அறிவோம்





## பத்துக்கட்டளைகள் (இச 5:1-6:3)

மோசேயின் இரண்டாவது உரையும் முதல் உரையைப் போல மறையுரை போலவே அமைந்துள்ளது. இந்த உரையின் தொடக்க வரிகளும் (4:44-49) உரை நிகழ்த்தப்பட்ட இடம் மற்றும் காலத்தை வெளிப்படுத்தித் தொடங்குகிறது. யோர்தானுக்குக் கிழக்கே வாழ்ந்த எமோரிய அரசர்களான சீகோன் மற்றும் ஓகு ஆகியோரை வெற்றிகொண்டபின் இந்த உரையை யோர்தானுக்குக் கிழக்கே பெத்பகோருக்கு எதிரே உள்ள சமவெளியில் எஸ்போனில் வாழ்ந்த எமோரியின் அரசனாகிய சீகோனின் நாட்டில் மோசே நிகழ்த்துகிறார் இந்த உரையில் பொதுவாக வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறியபின் இஸ்ரயேல் மக்கள் பின்பற்ற வேண்டிய கட்டளைகள், நியமங்கள் மற்றும் முறைமைகளை மோசே பேசுகிறார். இந்த உரையின் முதல் பகுதியில் (இச 5:1-6:3) மோசே பத்துக் கட்டளைகளைப் பற்றிப் பகிர்ந்து கொள்கிறார். பத்துக் கட்டளைகள் சீனாய் மலையில் ஆண்டவரால் மோசே வழியாகக் கொடுக்கப்பட்டவை. சீனாய் மலை உடன்படிக்கையின் அடிப்படைச் சட்டங்கள் அவை. மோசே அவற்றை மக்களுக்கு நினைவூட்டுகிறார். விப 20 வது பிரிவில் பதிவுசெய்யப்பட்டுள்ள பத்துக்கட்டளைகளுக்கும் இச 5 இல் பதிவுசெய்யப்பட்டுள்ள பத்துக்கட்டளைகளுக்கும் சில சிறிய வித்தியாசங்கள் உள்ளன. மோசே இஸ்ரயேலர் அனைவரையும் வரவழைத்துக் கூறுகிறார். அவர் கூறுகின்ற கட்டளைகளை அவர்கள் செவிகொடுத்துக் கேட்கவும்,அவற்றைக் கடைபிடிப்பதில் கருத்தாயிருக்கவும் அவர்களுக்கு அழைப்புவிடுக்கிறார். ஆண்டவர் கொடுக்கின்ற இந்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வது மிகவும் முக்கியமானது. மோசே வழியாக ஆண்டவர் கூறுகின்ற இந்தக் கட்டளைகள் கட்டாயமாகக் கடைபிடிக்கப்பட வேண்டியவை.

பத்துக்கட்டளைகளைப் பற்றிச்

சிந்திக்குமுன் பத்துக் கட்டளைகள் பற்றிய ஒரு சில சிறப்புக் கூறுகளைச் சிந்திப்பது நல்லது. ஆண்டவர் இஸ்ரயேல் மக்களின் மூதாதையான ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கைக்கும் சீனாய் மலையில் இஸ்ரயேல் மக்களுடன் செய்த உடன்படிக்கைக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் உண்டு. ஆண்டவர் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கை நிபந்தனையற்ற ஒரு உடன்படிக்கை. அந்த உடன்படிக்கையின் வழியாக ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுக்கு என்ன செய்வார் என்பது கூறப்படுகிறது (தொநூ 12:1-4; 15:1-6). இஸ்ரயேல் மக்களின் கடமைகள் அந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்படவில்லை. சீனாய் மலை உடன்படிக்கை நிபந்தனையுடன் கூடிய உடன்படிக்கை. உடன்படிக்கையின் மக்களாக வாழ்வதற்கு இஸ்ரயேல் மக்கள் என்ன செய்யவேண்டும்? எவ்வாறு வாழவேண்டும்? என்பவை தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆண்டவர் மூதாதையர்களுக்குத் தருவதாக வாக்களித்த நாட்டை இஸ்ரயேல் மக்களுக்குத் தருவார்; இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழவேண்டும். நிபந்தனைகளோடுதான் நிலம் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. பத்துக் கட்டளைகள் இந்தத் நிபந்தனைகளின் ஒரு கூறாக உள்ளது எனலாம். மேலும் மோசே வழியாக ஆண்டவர் கொடுக்கின்ற இந்தக் கட்டளைகள், நியமங்கள் மற்றும் முறைமைகள் அனைத்தும் அவற்றைக் காது கொடுத்துக் கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்குமட்டுமல்ல எதிர்காலச் சந்ததியினருக்கும் கூறப்படுகிறது என்பதை மனதில் கொள்ளவேண்டும். இந்தக் கட்டளைகள் எல்லாக் காலத்தினருக்கும் பொருந்துபவை.

பத்துக் கட்டளைகள் உடன்படிக்கையின் அடிப்படைச் சட்டங்களாகத்தான் கொடுக்கப்படுகின்றன என்பதை மறத்தலாகாது. பத்துக் கட்டளைகள் சுமைகள் அல்ல மாறாக சுதந்திரமாக உறவில் வளர்வதற்காக கொடுக்கப்பட்ட வழிமுறைகள். இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் இஸ்ரயேல் மக்களைக் கட்டாயப்படுத்தவில்லை; அவர்கள் சுதந்திரத்துடன் ஒரே கடவுளை வழிபட்டு வாழ்வதற்கு வாய்ப்பு வழங்கியிருக்கிறார். எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்த அவர்களை சுதந்திரக் காற்றை சுவாசிக்க வைத்தவர் ஆண்டவர். ஆண்டவரைமட்டுமேவழிபட்டு, அவருக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதற்கு அது ஒன்றே போதுமானது. பத்துக்கட்டளைகளுள் முதல் கட்டளை ஆண்டவரைத் தவிர வேறு கடவுளர்களை இஸ்ரயேல் மக்கள் கொண்டிருக்கக் கூடாது எனக் கூறுகிறது. இஸ்ரயேல் மக்களின் வரலாற்றில் பல நேரங்களிலும் இந்தக் கட்டளைக்கு அவர்கள் உண்மையாக இருக்கவில்லை. இந்தக் கட்டளை ஆண்டவருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் சுதந்திரத்தை அளிக்கிறது. இஸ்ரயேல் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் வேறு கடவுளர்களை திருப்திப்படுத்தி வாழவேண்டிய அவசியமில்லை. ஆண்டவரை எந்த உருவத்திலும்

வழிபடக்கூடாது என்ற உண்மை எந்தவிதமான மூடப்பழக்க வழக்கங்களிலிருந்தும், சிலை வழிபாட்டிலிருந்தும் மக்களை விடுவித்து ஆண்டவரை உண்மையான கடவுளாக வெளிப்படுத்துகிறது. ஆண்டவரை வழிபடுவதே உண்மையான சமய வழிபாடாக இங்கேச் சித்தரிக்கப்படுகிறது. ஆண்டவருக்கு பிரமாணிக்கம் உள்ளவர்களாக வாழ்வதில்தான் இஸ்ரயேல் மக்களின் விடுதலை அடங்கியிருக்கிறது.

இரண்டாவதுகட்டளை முதல் கட்டளையோடு தொடர்புடையது. கடவுளின் பெயரை வீணாகப் பயன்படுத்துவதை இந்தக் கட்டளைத் தடுக்கிறது. பண்டைய காலத்தில் ஒருவருக்குப் பெயர் வைப்பது, ஒருவருடைய பெயரை அறிந்திருப்பது அல்லது பெயரை மாற்றுவது அந்த மனிதரின் மேல் அதிகாரம் கொண்டிருப்பதன் வெளிப்பாடாக அறியப்பட்டது. தொடக்க நூலில் விலங்குகளுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் பெயரிடுவதன் வழியாக அவற்றின்மீது ஆதாம் அதிகாரம் பெறுவதைப் பார்க்கிறோம் (தொநூ 2:19-22). ஆண்டவர் ஆபிரகாமை உலக நாடுகளின் தந்தையாக நியமிக்கிறார் (தொநூ 17:3-8). ஆண்டவர் தனது பெயரை மோசேக்கு வெளிப்படுத்துவதை வாசிக்கிறோம். பண்டைய மேற்காசிய நாடுகளின் சிந்தனையில் பெயரில்லாத கடவுள் அறியப்படாத கடவுளாகவே இருப்பார். மூன்றாவது கட்டளை ஓய்வுநாளுடன் தொடர்புடையது. பண்டைய காலத்தில் அன்றாட தேவைகளை நிறைவு செய்வதற்கு ஒவ்வொருநாளும் வேலை செய்ய வேண்டிய கட்டாயம் இருந்தது. எனவே ஓய்வெடுப்பது ஒரு சொகுசான வாழ்வைக் குறித்தது. இதன் காரணமாக ஓய்வுநாள் கட்டளைமிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டது. ஓய்வுநாள் தொடர்ந்த வேலையிலிருந்து இளைப்பாறுதல் பெறுவதற்கு கொடுக்கப்படுகின்ற ஒரு கொடை எனக்கூறலாம். ஓய்வுநாள்; கட்டளை வேலையிலிருந்து ஓய்வுபெறுவதால் வருகின்ற புனிதத்துடன் (தூய்மையுடன்) தொடர்புடையதாகவும் உள்ளது. தூய்மையாக இருப்பதற்கு ஒன்றைத் தனியாக ஒதுக்கிவைக்கவேண்டும். ஓய்வுநாள் தனியாக ஒதுக்கப்பட்ட நாளாக, சிறப்பு நாளாக உள்ளது. இச 15 வது பிரிவிலும் ஓய்வுநாளின் முக்கியத்துவம் பேசப்படுகிறது. அந்தப் பிரிவில் கடனிலிருந்து விடுதலையளிப்பது பேசப்படுகிறது. இறைவாக்கினர்கள் ஓய்வுநாள் அனுசரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசுகிறார்கள்.

நான்காவது கட்டளை கடவுளைப் பற்றிய சிந்தனைகளிலிருந்து மாறி மனிதர்களைப் பற்றிய சிந்தனையை நோக்கி நகர்கிறது. இந்தக் கட்டளை குடும்ப வாழ்வின் கண்ணியத்தைப் பாதுகாக்கிறது. குடும்பத்தில் முதியவர்கள் சுமையாகக் கருதப்படக்கூடாது. சிறப்பாகப் பெற்றோர் மதிக்கப்படவேண்டும்; அவர்களின் முதிய பருவத்தில் அவர்கள் பராமரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படவேண்டும். பழைய

ஏற்பாட்டு நூல்கள் இதைப் பல இடங்களில் வலியுறுத்துகின்றன (நீமொ 19:26; 30:17; சீராக் 3:16). இந்தக் கட்டளை ஒரு வாக்குறுதியுடன் வருகின்றது. பெற்றோரை மதித்து வாழ்பவர்கள் ஆண்டவர் அளிக்கும் நாட்டில் நெடுநாள் வாழ்வார்கள் எனக் கூறப்படுகிறது. வாக்குறுதிகள் நிறைவேறுவதற்கு கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது மிகவும் அவசியம். ஐந்தாவது கட்டளை (வ 17) கொலை செய்வதைத் தடுக்கிறது. உயிரைக் கொடுப்பவர் கடவுள் எனவே அவருக்கு மட்டுமே உயிரின்மீது அதிகாரம் உண்டு. இஸ்ரயேல் மக்கள் தங்கள் உயிரைக் காத்துக் கொள்ளவேண்டும் என்ற செய்தி இந்தக் கட்டளையின் மையச் செய்தியாக உள்ளது (லேவி 19:17-18). ஆறாவது கட்டளை திருமணம் மற்றும் குடும்ப வாழ்வின் கண்ணியத்தைப் பாதுகாக்கிறது. பண்டைய சமுதாயங்கள் பெரும்பாலும் ஆணாதிக்கச் சமுதாயங்களாகவே இருந்தன. அங்கே ஆண்களும் பெண்களும் வித்தியாசமான விதங்களில் மதிப்பிடப்பட்டார்கள். உதாரணமாக, ஒரு ஆண் திருமணமான இன்னொரு பெண்ணுடன் உறவு கொண்டால் மட்டுமே அவன் விபசாரம் செய்வதாகக் கருதப்பட்டது. மாறாக ஒரு பெண் எந்தவொரு ஆணுடன் தொடர்பு கொண்டாலும் அவள் விபசாரம் செய்வதாகக் கருதப்பட்டாள். இன்றைய பார்வையில் அது தவறானதாகக் தெரியலாம். ஆனால் அன்றையச் சூழலில் இந்தக் கட்டளை வாரிசு உரிமையைக் காப்பதற்காகவும் திருமணத்தின் புனிதத்தைப் பாதுகாக்கவும் உருவாக்கப்பட்டதாகக் கருதலாம்.

ஏழாவது கட்டளை (வ 19) திருடுவதற்கு எதிரானது. இந்தக் கட்டளை உடமைகளைத் திருடுவதைவிட மனிதர்களின் கண்ணியத்திற்கு எதிராகச் செயல்படுவதைக் குறிப்பதாக உள்ளது என அறிஞர்கள் கருதுகின்றனர். உதாரணமாக, மனிதர்களைக் கடத்துவது, அடிமைகளாக விற்பது போன்றவற்றைக் கூறலாம். மனிதர்கள் பல்வேறு விதங்களில் சுரண்டப்படுகிறார்கள்; அவர்களின் சுதந்திரம் பறிக்கப்படுகிறது. இச 24:7 இத்தகைய குற்றங்களை கொலைத் தண்டனைக்குரிய குற்றங்களாகப் பார்க்கிறது. மனிதர்களுக்கு மதிப்புதராமல் தவறான முறையில் அவர்களைப் பயன்படுத்துவதையும், அதிகாரத் திமிரில் அடுத்தவர்களை அடக்கி ஆள்வதும் திருடுவதுதான். எட்டாவது கட்டளை (வ 20) பிறருக்கு எதிராகப் பொய்ச்சான்று சொல்வதைத் தடை செய்கிறது. இஸ்ரயேல் மக்களின் சட்டப்பூர்வமான உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். மனிதர்கள் அமைதியுடன் வாழ வேண்டுமென்றால் உண்மையைப் பேசுவது அவசியம். குறிப்பாக, நீதிமன்றங்களில் உண்மை பேசவேண்டும். எனவேதான் இஸ்ரயேலரின் சட்டங்களில் சாட்சியம் கூறுவதற்கு குறைந்தது இரண்டு அல்லது மூன்று பேருடைய சாட்சியங்கள் தேவைப்படுகின்றன (இச 19:1; தானி 13:2-59; மத் 18:16). ஒன்பதாவது மற்றும் பத்தாவது கட்டளைகள் (வ 21) பிறன்

மனைவியைக் காமுறுவதையும் அவனுக்குச் சொந்தமான உடமைகளைக் கவர விரும்புவதையும் தடைசெய்கிறது. பழைய ஏற்பாட்டிலே அரசன் தாமிது உரியாவின் மனைவியான பத்சேபாவுடன் உறவு கொள்வதை பிறன் மனைவியைக் காமுறுவதற்கு உதாரணமாகக் கூறலாம் (2 சாமு 11:1-5). ஒருவருடைய உடமைகளைக் கவர்வது திருடுவதற்குச் சமம். பத்துக் கட்டளைகள் உடன்படிக்கையின் அடிப்படைக் கட்டளைகள் என்பதை நாம் அறிவோம். ஆண்டவரால் கொடுக்கப்பட்ட இந்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதன் வழியாகத்தான் இஸ்ரயேல் மக்கள் உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாக வாழமுடியும்; ஆண்டவர் அளிக்கும் நாட்டில் அவர்கள் நீண்ட காலம் மகிழ்வுடனும் அமைதியுடனும் வாழ முடியும்.

பயணம் தொடரும்,

அன்புடன் ஆ. அலெக்ஸ் cmf.





அருட்பணி.ஜஸ்டின் சேவியர் ராஜ்,
பங்குத் தந்தை, திருக்குடும்ப ஆலயம், பெருந்துறை, கோவை மறைமாவட்டம்

**பொதுக்காலம் 25ம் வாரம் ஞாயிறு**

**24.09.2023**

எசாயா 55/6-9 - பிலிப்பியர் 1/20-24, 27 - மத்தேயு 20/1-16

## உன்னால் முடியும் தம்பி

இறை இயேசுவில் அன்பிற்குரியவர்களே, இந்நாள் நமது பொன்னாள் என்ன புத்தகத்தில் ஆசிரியர் கவிஞர் தியஸகு இவ்வாறு கூறுவார். மற்றவர்களை மதிக்கத் தெரியாத அல்லது மதிக்க விரும்பாத போவழிகள் மனிதர்கள் அல்ல. களிமண் உருண்டைகள். மதிக்க வேண்டும் என்றால் மாலை மரியாதை செய்ய வேண்டம் என்று அர்த்தம் அல்ல. அதற்கு அவசியமும் இல்லை. இங்கிதமாக நடந்து கொண்டால் போதும். ஆனால் அப்படி நடப்பதற்கு உள்ளத்தில் அன்பு வேண்டும். எல்லோரையும் அரவணைத்துச் செல்ல விரும்பிவிட்டால் நம் வார்த்தையிலும், செயலிலும் இங்கிதம் தானாக வந்துவிடும்.

ஒருநாள் கம்பரும், சோழ மன்னரும் ஆற்று நீர் காலில் படும்படி ஆற்றங்கரையோரமாக நடந்து சென்று கொண்டிருந்தனர். கம்பருக்குத் தாகம் எடுத்தது. உடனே அந்த அற்று நீரை அள்ளிப் பருகினாார். இதைவைத்துக் கம்பரை மட்டம்தட்ட நினைத்த மன்னர், கம்பரே என் காலில் விழுந்த நீரைத்தானே குடித்தீர் என்று கிண்டலாகக் கேட்டார். அதற்குக் கம்பர், நீரே காலில் விழும்போது நான் என்ன செய்வது? என்று இருபொருளில் பதிலடி கொடுத்தார். எல்லோருக்கும் சுயமரியாதை இருக்கிறது, யாருமே அதை விட்டுக் கொடுக்க விரும்ப மாட்டார்கள். ஒருவரை அவமதிப்பதோ, அவமானப்படுத்துவதோ மனிதப் பண்புக்கு எதிரானது. அதனால் எந்த நன்மையும் நாம் செய்துவிடமுடியாது. எனவே ஒருவரை ஒருவர் மதிக்கக் கற்றுக் கொள்வோம். அதில் பல நன்மைகள் உண்டு. நம் வாழ்வில் வெற்றிகளும், இன்பங்களும் தழைத்தோங்க எல்லோரிடமும் அன்பு செலுத்துவோம். மற்றவரின் உணர்வுக்கு மதிப்பளிப்போம். யார் மனதையும் புண்படுத்தாமல் இருப்போம்.

இறை இயேசுவில் அன்பிற்கு உரியவர்களே, இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 25ம் ஞாயிற்றுக் கிழமையைக் கொண்டாடுகின்றோம். இன்றைய வாசகங்கள் மனிதனால் முடிகிற ஒரு தன்மையைப் பற்றி எடுத்துரைக்கின்றன. இன்றைய முதல்

வாசகத்தில் எசாயா இறைவாக்கினர் மாறுபட்ட இரண்டு எண்ணங்களைப் பற்றிக் கூறுகிறார். ஒள்றுகடவுளின் எண்ணம், செயல்பாடு மற்றொன்று மனிதனின் எண்ணம் அவனின் செயல்பாடு. என்னதான் மனிதனை கடவுள் தன் சாயலாக உருவில் படைத்திருந்தாலும், அவனின் உள்ளம் மாறுபட்டிருக்கிறது. இயேசு அழைக்கிறார். உங்கள் வானகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல, நீங்களும் நிறைவுள்ளவர்களாக இருங்கள். மனிதனின் நினைவு என்பது, தனக்குப் பிடிக்காதவர்களை அழித்து விடுவது.

கடவுளின் நினைவு என்பது தன்னை வெறுப்பவர்களையும் மகிழ்ச்சிபடுத்துவது. கடவுளது அன்பையும், அவரது இதயத்தையும் நம்முடைய அறிவினால் புரிந்து கொள்ளமுடியாது. இதை இன்றைய நற்செய்தி தெளிவாகக் கூறுகிறது. மனிதனுடைய அறிவு, ஒரு பணியாள் எத்தனை மணிநேரம் உழைத்தான் என்பதைப் பொறுத்து சன்மானம் வழங்குவது. கடவுளுடைய அறிவு, அந்த ஊதியம் எத்தனை பேரை வாழ வைக்கும் என்பது.

ஒரு தெனாரியம் என்பது ஒரு நாள் கூலி. கடைசி ஒரு மணிநேரம் மட்டுமே ஒருவன் உழைத்தான் என்பது மனித அறிவு. ஆனால், ஒரு நாள் முழுவதும் வேலை கிடைக்காமல், அன்று குடும்பத்தில் உள்ளவர்களை எப்படி உண்பார்கள் என்பது கடவுளுடைய அறிவு.

பல சமயங்களில் நாம் துன்பப்படுவதற்குக் காரணம் மற்றவர்களும் மகிழ்ச்சியாக இருக்கிறார்களே என்ற ஆதங்கம், பொறாமை. நாம் நினைத்தால், விரும்பினால், நாம் அந்த உணர்வை மேற்கொள்ள முடியும் என்பது கடவுளுடைய அசைக்க முடியாத நம்பிக்கை. நம்மால் முடியும் என்று நம்புவோம். அனைவரையும் அன்பு செய்வோம். ஆமென்.





# பொதுக்காலத்தின் 25-ஆம் ஞாயிறு

எசா. 55: 6-9, பிலிப். 1: 20-24, 27, மத். 20: 1-16

**24-09-2023**



பா. சேவியர்
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

இரக்கம் நிறைந்த இறைவனைக் காணவும், அவரது நீதியையும் அன்பையும் தாராள குணத்தையும் சுவைத்து மகிழவும் வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 25-ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

கடவுளின் அன்பை மனித அன்பால் அளந்துவிட முடியாது. அது, இருப்பவர் இல்லாதவர், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடு பார்க்காமல், அனைவரையும் சமமாக பாவித்து ஏற்று, அவர்களது தேவைகளை நிறைவு செய்யும் தாயுள்ளம் கொண்டது என்பதை நமக்கு உணர்த்துகிறது இன்றைய வழிபாடு.

இறையாட்சியில் அனைத்து இனத்தவருக்கும் சம உரிமை வழங்கப்படும், இறைவனின் ஆட்சி இரக்கத்தின் ஆட்சியாகும் என்ற கருத்தினை இன்றைய நற்செய்தி வழியாக இயேசு நமக்கு வழங்குகிறார்.

நீதியைவிட இரக்கம் ஒருபடி உயர்ந்தது. நீதியின்படி தண்டிக்கப்பட வேண்டியவர்கள் இறைவனின் இரக்கத்தின்படி மன்னிக்கப்படுகிறார்கள். மன்னிப்பதிலே இறைவன் தாராள மனம் கொண்டவர். பாரபட்சம் பார்க்காமல் அனைவருக்கும் தன் அருட்கொடைகளை வாரி வழங்குபவர் என்ற மகிழ்வான சிந்தனையை இன்றையத் திருப்பலி வழங்குகிறது.

நீதியைவிட இரக்கமே சமுதாய நலனுக்கு உகந்தது. இரக்கம் கருணை இவைகளே மனித குலத்தை வளர்ச்சிக்கு அழைத்துச் செல்லும் என்பதை உணர்ந்து, சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்வதைவிட அன்பை அடிப்படையாகக் கொண்டு வாழவும், நீதியின்படி வாழ்வதைவிட இரக்கத்தின்படி வாழவும் வரம் வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

பாபிலோனியாவில் அடிமை வாழ்வு வாழ்ந்த இஸ்ரயேல் இனத்தை இறைவன் விடுவித்துக் காப்பார் என்ற எசாயாவின் ஆறுதல் மொழிகள் இன்றைய முதல் வாசகமாக அருளப் பட்டுள்ளது. மனம் மாறினால் மன்னிப்பு உறுதி என்றக் கருத்தை மையமாகக் கொண்ட இவ்வாசகத் தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

உரோமை நகரச் சிறையிலிருந்து தூய பவுல் பிலிப்பியர் சமூகத்திற்கு கிறிஸ்துவில் மகிழ்ச்சியுற வலியுறுத்தி எழுதிய மடலின் ஒரு பகுதியே இன்றைய இரண்டாம் வாசகம். கிறிஸ்துவுக்காக மரணத்தைத் தழுவுவது அல்லது மக்களுக்காக மேலும் உழைப்பது என்ற இரு நிலைகளையும் சமமாக நோக்கும் பவுலடியாரின் கருத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) மனித மாண்பின் ஊற்றான இறைவா, உம் திருஅவையின் தலைவர்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் தாங்கள் வாழ்வதும் பணிபுரிவதும் கிறிஸ்து வுக்காகவே என்பதை தங்கள் மனங்களில் நிறுத்தி, இயேசுவின் நற்செய்திக்கேற்ப தங்கள் பணி களைத் தொடர அவர்களுக்குத் தேவையான ஞானத்தையும் ஆற்ற லையும் நல்ல உடல் நலத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) இரக்கமும் கனிவும் நிறைந்த தந்தையே இறைவா, உமது பேரிரக்கத்தால் மன்னிப்புப் பெற்று, உம் திருவருளால் நிறைந்துள்ள நாங்கள் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்வதைவிட அன்பை அடிப்படையாகக்கொண்டு வாழவும், நீதியின்படி வாழ்வதைவிட இரக்கத்தின்படி வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3) அரசருக்கெல்லாம் அரசரான எம் இறைவா, எம் நாட்டில் நிலவும் அரசியல் பொருளாதாரச் சீர்கேடுகள் சரிசெய்யப்பட்டு நாடு முன்னேற்றப் பாதையில் பயணிக்க வரமருளும். நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள் தூய ஆவியின் வழிநடத்துதலால் மக்கள் நலனை மட்டுமே நோக்கமாகக்கொண்டு செயல்பட அவர்களுக்குத் தேவை யான ஞானத்தையும் ஆற்றலையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) வாழ்வுதரும் வல்ல தேவனே, வாழ்வு என்பது கிறிஸ்துவே என்பதை நாங்கள் உணர்ந்து வாழவும், துன்பங்கள், துயரங்கள், கவலைகள், நோய்கள் எங்களைச் சூழ்ந்தபோதும் யாரிடம் செல்வோம் இறைவா, வாழ்வு தரும் வார்த்தை உம்மிடம்தானே உள்ளது என்ற நம்பிக்கையுடன் உமது கரத்தை இறுகப் பற்றிக்கொண்டு வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

பகைவர்கள் சாதாரணவர்களை வெறுப்பதில்லை
தங்களைவிட மிகச் சிறந்தவர்களையே வெறுக்கின்றார்கள்

பழிவாங்குவதைவிட, உங்களைக் குணமாக்கிக்கொண்டு
மேலே மேலே முன்னேறுங்கள்
அவர்களின் நிலைக்கு உங்களைத் தாழ்த்தாதீர்கள்

விவாதத்தில் குரலை உயர்த்தாதீர்கள்
தர்க்கத்தின் தரத்தை உயர்த்துங்கள்

மற்றவர் பார்ப்பதைவிட அதிகமாக சேமியுங்கள்
நீங்கள் அறிந்ததைவிடக் குறைவாகப் பேசுங்கள்

உங்கள் பிரிவில் நல்லவர்கள் அழுவார்கள்
நீங்கள் அழும்போது பொய்யானவர்கள் உங்களைவிட்டு பிரிவார்கள்

பொறுமை மிகப்பெரிய சொத்து
உங்களின் நேரத்திற்காகக் காத்திருங்கள்

உங்களின் மறைமுக எதிரிகளை எதுவும் செய்ய வேண்டியதில்லை
அவர்களின் அழிவை காலம் காட்டும்

தனக்காகக் காத்திருப்பவரிடம்
அற்புதங்கள் தகுந்த நேரத்தில் அவர்களிடம் வரும்

உண்மையானவர்கள் நடிக்க வேண்டிய அவசியமில்லை
பொய்யர்கள் நடிக்க வேண்டியிருக்கும்.

# மனித உடல் தீயதா?

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
ஒடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண்டான்
என்று உடம்பினை யானிருந் தோம்புகின்றேன்
- திருமந்திர ம் 725

ஆன்மீக தத்துவங்கள் பலவற்றில் கர்மவினையால் உடல் பெற்று பிறக்கின்றோம் என கூறுவது உண்டு. இத்கருத்தைக் கொண்டு உடம்பினை முதலில் தவறாகக் கண்டேன் என்கிறார் திருமூலர். உடம்பை முதலில் கர்மாவின் வடிவாகப் பார்த்தேன். ஆனால் அதனுள்ளே ஓர் அற்புதமான பொருள் இருப்பதைக் கண்டேன். அது ஆன்மா என்ற பரமாத்மாவின் வடிவம். பரமாத்மாவே உடல் என்ற கோவிலில் குடிகொண்டிருப்பதால் இந்த உடல் கர்மாவினால் தோன்றியது என இழிவாகக் கூறமுடியுமா? அதனால், உள்ளே இருக்கும இறைவனைக் கொண்டிருக்கும் உடலை நான் போற்றிப் பாதுகாக்கின்றேன்.



# சங்க இலக்கியச் சுவை





திருமதி.லீமா விக்டோரியா - ஆசிரியை

சங்க இலக்கியம் என்பது தமிழ் இலக்கியங்கள் ஆகும். நம் சங்க இலக்கியங்கள் எகிமு 500 லிருந்து கிபி 200 வரை உள்ள காலப்பகுதியில் எழுதப்பட்டவை. சங்க இலக்கியங்கள் 473 புலவர்களால் 2381 பாடல்களைக் கொண்டது அக்காலத்தில் பாடல்கள் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டன. சில ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டவைகள் காலப்போக்கில் அழிந்துவிட்டன. 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களான சி.வை.தாமோதரன் பிள்ளை மற்றும் உ .வே. சாமிநாதன் பிள்ளை ஆகியோரது முயற்சியினால் சங்க இலக்கியங்கள் மீண்டும் அச்சு பெற்றன.

சங்க இலக்கியங்கள் அகம்இ புறம் என்ற இரண்டு பகுதிகளைக் கொண்டது. இல்லறத்தை அகமாகவும்இ போர்இ கல்விஇ வீரம் கொடைஇ அரசியல் இவற்றை புறமாகவும் வைத்து பல்வேறு புலவர்களால் எழுதப்பட்ட நூல்களின் தொகுப்பாகும். இவை தொகை நூல்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. சங்க காலத்தில் பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையில் நிலவிய கடைச்சங்க காலத்தில் இயற்றப்பட்ட தொகை நூல்கள் காலப்போக்கில் இரண்டாக பிரிக்கப்பட்டன.

வை மேற்கணக்கு நூல்கள் மற்றும் கீழ்க்கணக்கு நூல்கள். குறைந்த அடிகள் உடைய நூல்கள் கீழ்க்கணக்கு நூல்கள் எனவும் நிறைந்த அடிகளுடைய நூல்கள் மேல் கணக்கு நூல்கள் எனவும் வகைப்படுத்தப்பட்டன.

மல் கணக்கு நூலில் 18 நூல்களும் கீழ்க்கணக்கு நூல்களில் 18 நூல்களும் பாட்டின் நீளத்தைக் கொண்டே இவ்வாறு வகைப்படுத்தினர்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு என இரண்டாக வகைப்படுத்தப்பட்டன.
எட்டுத்தொகை நூல்கள் யாவன?

அவை:
1. நற்றிணை

2.குறுந்தொகை

3.ஐங்குறுநூறு

4.பதிற்றுப்பத்து

5.பரிபாடல்

6.கலித்தொகை

7.அகநானூறு

8. புறநானூறு.

இவற்றை நன்கு மனதில் கொள்ளவற்றை நன்கு மனதில் கொள்ள

நற்றினை நல்ல குறுந்தொகை
ஐங்குறுநூறு ஒத்த பதிற்றுப்பத்து
ஓங்கு பரிபாடல் கற்றறிந்தார்
ஏத்தும் கலியோடு அகம் புறம்
என்று இத்திறத்த எட்டுத்தொகை என்பர்.

நற்றிணை (நல் + திணை)
400 பாடல்களைக் கொண்டது. நற்றிணை அகத்தைப் பற்றி பாடுவது.
இதை தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி.
இதில் ஒரு கடவுள் வாழ்த்தும் உண்டு. அதனையும் சேர்த்து 401 பாடல் ஆகிறது.
கடவுள் வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
இந்நூலின் ஆசிரியர்கள் 275 அல்லது 175 என்பர்.
பாடல்கள் ஒன்பதிலிருந்து 12 அடிகளால் ஆனவை.
பதிப்பித்தவர் பின்னத்துவார் நாராயணசாமி ஐயர்.

பாடாண்திணை – கடவுள் வாழ்த்துப் பாடல்.

மாநிலம் சேவடி ஆகஇ தூ நீர்
வளை நரல் பெளவம் உடுக்கை ஆக
விசும்பு மெய்ஆகஇ திசை கை ஆக,

பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ஆக
இயன்ற எல்லாம் பயின்று அகத்து அடக்கிய
வேத முதல்வன் என்ப
தீது அற விளங்கிய திகிரியோனே.

பொருள்:
பெரிய நில உலகமே தன் செந்நிறத் திருவடிகளாகவு, வெள்ளிய சங்குகள் ஒலிக்கின்ற பரந்த கடலே தன் ஆடையாகவும், வானமே தன் உடம்பாகவும், திசைகளே தன் கைகளாகவும், குளிர்ந்த கதிர்களை உடைய திங்களும் ஞாயிறுமே தன் கண்களாகவும் கொண்டு உலகில் அமைந்த பொருள்கள் அனைத்திலும் தங்கி அவற்றைத் தன்னுள் அடக்கிய, குற்றம் தீர விளங்கிய சக்கரப்படையை உடையவனே, வேதங்களுக்கு முதல்வன் ஆவான் என்று சொல்லுவர் சான்றோர்.

கருத்துரை:

இயன்றதெல்லாம் பயின்று அகத்து அடக்கிய மாயோனே வேத முதல்வன் என இப்பாடல் உணர்த்துகிறது.

திருவிவிலியத்தில்,

ஆண்டவர் கூறுவது இதுவே:
விண்ணகம் என் அரியணை;
மண்ணகம் என் கால்மனை
– ஏசாயா– 66:1.

அவருடைய அரியணை
தீ கொழுந்துகளாயும்
அதன் சக்கரங்கள்
எரி நெருப்பாயும் இருந்தன.
தானியேல் 7:9.

நான், ஆம், நானே ஆண்டவர்;
என்னையன்றி
வேறு மீட்பர் இல்லை.
– ஏசாயா 43: 11.

வரும் வாரம் மீண்டும் மலரும்.
ப.லீமா விக்டோரியா
தமிழாசிரியை.

# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 62

எழுபிறப்பும் தீயவைதீண்டாபழிபிறங்காப்
பண்புடைமக்கட் பெறின்

### குறள் விளக்கம்

பழி இல்லாத நல்ல பண்புடையமக்களைப் பெற்றால் ஒருவனுக்கு ஏழு பிறவியிலும் தீவினைப் பயனாகிய துன்பங்கள் சென்றுசேரா.

### சிந்தனை

அந்தச் சிறுவன் அதிகாலையிலேயே வேலைக்குச் சென்று விடுவான். கொளுத்தும் வெயிலா? கொட்டும் மழையா? எதைப்பற்றியும் அவன் கவலைப்படுவதில்லை. தன் வேலையைத் தவறாமல் செய்து வந்தான். அவன் செய்தது மாடு மேய்க்கும் வேலை குடும்பமோ மிகப் பெரியது. ஏழெட்டு பேர். போதிய வருமானமில்லை. வறுமையைப் போக்க அந்தச் சிறுவன் ஏதாவது ஒரு வேலை செய்ய வேண்டியதாயிருந்தது. அந்த ஏழைச் சிறுவன் தான் ரயிலைக் கண்டுபிடித்த ஜார்ஜ் ஸ்டீபென்சன்.

மக்கள் பேறு என்னும் இந்த அதிகாரத்தில் மக்கள் செல்வத்தின் மாண்பினைப்பற்றி பல்வேறு பொருள்களில் வள்ளுவர் கூறுகிறார். ஒருவனுக்கு பண்புடைய நல்ல பிள்ளைகள் இருப்பார்கள் என்றால் அவனுக்கு ஏழு பிறப்பிலும் தீவினை அணுகாது என்று இக்குறளில் குறிப்பிடுகின்றார். நல்ல பிள்ளைகளைப் பெற்றவன் அவன் வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் இருப்பான். பண்புடைய நல்ல மக்கள் இருப்பார்களே என்றால் அதுதான் ஒருவருக்குச் சிறந்த மகிழ்ச்சியாகும்.

திருவிவிலிய மாந்தர்களில் சாலமோனை ஈன்றதற்காக மகிழ்ச்சி அடைந்த தாமிது அப்சலோம் மட்டில் அதிக மகிழ்ச்சி அடையவில்லை. காயீனைவிட ஆபேலை அடைந்த மகிழ்ச்சியே ஆதாமுக்குப் பெரிதாக இருந்திருக்கும். இப்படி பண்புடைய பிள்ளைகளால் தான் பெற்றோர்கள் மகிழ்ச்சியும் நிறைவும் அடைவார்கள் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.





அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm



திரு.ஜெ.அம்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்



# நலம் தரும் இயற்கை வளம்

நலம் தரும் இயற்கை வளம்
நலம் நாடும் நல் உறவுகளுக்கு வணக்கம்.
இன்றைய நலத்தகவல்
கருஞ்சீரகம் மருத்துவ பயன்கள்.
கருஞ்சீரகம் விதைய மட்டும்
கொஞ்சம் வாயில போட்டு மெல்லுங்க சர்க்கரை நோய் ஓடியே போயிடும்....
தமிழர்களின் வீடுகளில் பயன்படுத்தப்படுகிற முக்கியமான மூலிகைகளில்
ஒன்று தான் கருஞ்சீரகம்.
இதை நாம் ஏன் கட்டாயம் வீட்டில் வைத்திருக்க வேண்டுமென்றால்
அது எல்லோர் வீடுகளிலும் அடம்பிடித்து உட்கார்ந்திருக்கிற
சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், உடல் பருமன்இ கல்லீரல் ஆரோக்கியம்
ஆகிய பிரச்சினைகளை
ஓட ஓட விரட்டி அடிக்கும் ஆற்றலைக் கொண்டிருக்கிறது.
அதனால் நம் எல்லோர் வீடுகளிலும் கலோஞ்சி என்று சொல்லப்படுகிற
கருஞ்சீரகத்தை கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.

## எப்படி பயன்படுத்தலாம்?

உலர்ந்த அல்லது லேசாக வறுத்த கருஞ்சீரகத்தை பொடி செய்து வைத்துக் கொண்டு
அதை காய்கறிகள் மற்றும் கூட்டுஇ பொரியல் போன்றவற்றில்
தூவிப் பயன்படுத்தலாம்.
இதுவரையிலும் நீங்கள் தினசரி உணவில் கருஞ்சீரகத்தைப்
பயன்படுத்தவில்லை என்றால் இன்றிலிருந்து ஆரம்பித்து விடுங்கள்.
இதை தினமும் சிறிதளவு எடுத்துக் கொள்ளலாம். கொலஸ்ட்ராலை குறைக்க
கருஞ்சீரகத்தில் உள்ள அதிக அளவிலான ஆன்டி ஆக்சிடண்ட்டுகள்
நம்முடைய உடலில் உள்ள தேவையில்லாத அதிகப்படியான
கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்கிறது.

அதிலும் கருஞ்சீரக எண்ணெய்கள் நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கின்றன.
அவை பொடியை விடவும் அதிகப்படியான நன்மைகளை
மிக வேகமாகக் கொடுக்கும்.
தினமும் உணவில் இந்த பொடியையோ அல்லது எ
ண்ணெயையோ சேர்த்து வந்தால்
மிக வேகமாக உங்களுடைய கெட்ட கொலஸ்ட்ராலின் அளவு குறைவதை
உங்களால் நன்கு உணர முடியும்.

## புற்றுநோய் எதிர்ப்பு

கணையத்தில் புற்றுநோய் ஏற்பட்டு சமீபத்தில் இறந்து போனவர் தான்
கோவா மாநில முதலமைச்சர் பாரிக்கர் என்பது எல்லோருக்கும் தெரியும்.
அத்தகைய கொடிய புற்றுநோயான
கணைய புற்றுநோய் செல்களைத் தாக்கி
அழிக்கக்கூடியர் தான் இந்த கருஞ்சீரகம்.
கணையப் புற்றுநோய் மட்டுமல்ல, மற்ற எல்லா வகையான
புற்றுநோயையும் தாக்கி அழிக்கக்கூடிய ஆற்றல் கொண்டது.

## எடை குறைப்பு

நம்முடைய உடலில் இருக்கிற கொஞ்சம்
அதிகப்படியான எடையையும் தேங்கியிருக்கும்
சதைகளையும் யாராவது வந்து
எந்த வலியும் தொந்தரவும் அதிகப் படியான சிரமமும் இல்லாமல்
யாராவது குறைத்துவிட்டுப் போனால் எப்படியிருக்கும்.
அப்படி எந்த சிரமமும் இல்லாமல் எடையைக் குறைக்க
உங்களுக்கு உதவுவது தான் இந்த கருஞ்சீரகம்.
இந்த கருஞ்சீரகத்தை வெறும் வாணலியில் போட்டு வறுத்தெடுத்து
அதை பொடி செய்து கொள்ள வேண்டும்.
பொடி செய்து வைத்திருப்பதை தினமும் காலையில்
ஒரு ஸ்பூன் பொடியை எடுத்து
அப்படியே சாப்பிட்டாலும் சரி,
வெதுவெதுப்பான நீரில் கலந்து குடித்தாலும்
சரி சரசரவென்று வேகமாக எடை குறையும்.
நலம் நாடும் நல்லுள்ளங்கள்
நாளும் தவறாமல் பயன்படுத்தி...
நலம் பெறுக வளம் பெறுக.
நன்றி எம் ஈறவுகளே.

என்றும் உங்கள் அன்புசகோதரன்
நலநெறியாளன்
ஜே. அனபுரோஸ்
9360456063